4th November 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்கள் எட்டு லட்சம் ஏக்ரா மட்டும் இறைவனுக்குச் சொந்தமானது என்று சொன்னார்கள். எல்லா நிலங்களும் இறைவனைச் சேர்ந்த நிலங்கள்தான்.

SRIMATHI A. S. PONNAMMAL : இன்று நமது சென்னை மாகாணத்தில் ஹரிஜன மக்களுக்காக வீடுகட்டிக் கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மான்யம் போதாது. அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஒரு தாலுகாவிற்கு 40 வீடுகள்தான் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்றி ஒரு தாலுகாவிற்கு 100 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நமது அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நமது அரசாங்கம் மட்டும் பணம் செலவழித்து பூர்த்தி செய்ய முடியாது. மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு, அவர்கள் கொடுக்கும் கிராண்டை வைத்துக் கொண்டு எவ்வளவு தூரம் வீடு கட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் செய்து கொண்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் பெருவாரியான வீடுகள் கண்டிராக்டர் மூலம் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அந்த வீடுகள் ஒரு வருஷம், இரண்டு வருஷம் கூட தாங்குவது இல்லை. அதுபற்றி சந்தேகமும், அதிருப்தியும் இருப்பதால், இந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட ஹரிஜனங்களுக்கு வீடுகட்டும் சாமான்கள் வாங்கிக் கொடுப்பதற்கு செலவு செய்யும் யோசனையை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : சாமான்கள் இப்பொழுது அதிகப் படியான விலைக்கு விற்கின்றன. இப்பொழுது இருக்கும் முறையே சரியாக இருக்கிறது. ஹரிஜன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், நல்ல முறையிலே காண்டிராக்ட் எடுக்க முன் வந்தால் அதை அரசாங்கம் கவனிக்கும்.

SRI P. G. MANICKAM : என்னுடைய 751-வது கேள்விக்கு சர்க்கார் அளித்த பதிலிலிருந்து '1956–57-ல் ஹரிஜனங்கள் வீட்டு மனைகளுக்காக ரூபாய் 55,000 ஒதுக்கப்பட்டது. கோயம்பத்தூர் ஜில்லாவிலே ரூ. 31,243 மறுபடி செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. . . ,'

MR. SPEAKER : தயவுசெய்து கேள்வி நேரத்தின்பொழுது சிறிய பிரசங்கம் செய்யக்கூடாது என்று முன்னமே சொன்னேன். கனம் அங்கத்தினர் சபாநாயகர் கூறுவதை அனுசரித்து நடப்பார் என்று நினைக்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு வருஷமும் கோயம்புத்தூர் ஜில்லாவில் பணம் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறது. இந்த வருஷம் ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவழிக்கப்படும் என்று சர்க்கார் ஒரு உறுதி மொழி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கோயம்புத்தூர் ஜில்லாவிலே ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை பூரணமாக செலவழிப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

The Madras State Sub-Registrars' Association

* 78 Q.—SRI M. P. SUBRAMANIAM (on behalf of Sri T. Veluchamy) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have received any representation from the Madras State Sub-Registrars' Association; and

(b) if so, when, and the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Harijan members in Panchayat Board

* 79 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Panchayat Boards in the Coimbatore district:

(*b*) in how many of them there are Harijan members; and

(*c*) the percentage of Harijans among the elected members in each Panchayat Board?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) There are thirty-one class I and 444 class II panchayats.

(*b*) 429.

(*c*) 14·98 per cent.

SRI P. G. MANICKAM : பஞ்சாயத்து தேர்தலிலே ஜன விகிதாசாரப்படி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படப்போவதாகத் தெரிகிறது. ஜனவிகிதாசாரத்தின் பிரகாரம் அந்த பஞ்சாயத்து ஏரியாவில் ஹரிஜனங்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டு குறைந்தது 500-க்கு 5 ஸ்தானங்கள் கொடுக்கப்படுவதாக பஞ்சாயத்து ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜன விகிதாசாரத்தின் பிரகாரம் ஹரிஜனங்களுக்கு மெம்பர் பதவிகள் வழங்குவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : அப்படி ஒரு முறையைக் கையாள்வதற்கு அவசியம் இருந்தால் அதை கவனிக்க வேண்டிய் ஏற்பாடு செய்யப்படும்.

MR. SPEAKER : இப்பொழுது ஸ்தல ஸ்தாபன வெள்ளை அறிக்கையைப் பற்றி சபை விவாதிக்கப்போவதால், இது விஷயமாக அந்த விவாதத்தில், பேசலாம்.

Labour dispute

* 80 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there were any conciliation proceedings in the matter of the dispute between the workers and the management of the Standard Motor Products of India Company on 22nd July 1957;

(*b*) the demands of the workers;

(*c*) whether any conciliation was effected; and

(*d*) if not, whether the Government propose to refer the dispute to adjudication?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The demand was that the apprentice, K. Kesavadas, who was discharged from service on 18th September 1956 should be reinstated.